ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப்பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2317/72 - 2023 පෙබරවාරි මස 02 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.02.02

*2317/72 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபை

## மாகாண சபை அறிவித்தல்கள்

**கிழக்கு மாகாணத்தின் மாகாண சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டம்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 171 (ஆ) ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவத்தின் பிரகாரம் கிழக்கு மாகாண ஆளுநராகிய அனுராதா யகம்பத் ஆகிய நான், சொத்துக்கள், நிதி நிர்வாகம் அதனுடன் தொடர்புடைய இடைநேர்விளைவான விடயங்கள் தொடர்பான இச்சட்டத்தை, அதில் விபரிக்கப்படுகின்ற காலப்பகுதி வரை கீழே குறிப்பிடப்பட்டுள்ள விதியை நடைமுறைப்படுத்த இத்தால் பகிரங்கப்படுத்துகின்றேன்.*

**அனுராதா யகம்பத்,**
ஆளுநர்,
கிழக்கு மாகாணம்.

ஆளுநர் செயலகம்,
உவர் மலை,
திருகோணமலை.
*2023, சனவரி, 30.*

**விதி**

*கிழக்கு மாகாணத்திற்குட்பட்ட திருகோணமலை மாவட்ட எல்லைக்குள் அமைந்துள்ள கிண்ணியா பிரதேச சபைக்கான 2023 ஆம் ஆண்டிற்குரிய வரவு செலவுத்திட்டத்தை 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவுகள் 168 மற்றும் 169 ஆகியவற்றின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக நிறைவேற்றத் தவறியுள்ளமையால் கிண்ணியா பிரதேச சபையின் தவிசாளருக்கான பதவி 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உள்ளூராட்சி அதிகார சபைகளின் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 17 இற்கு அமைய வெற்றிடமாகியுள்ளது. இதற்படி 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்திற்கு அமைய கிண்ணியா பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டிற்கான புதிய வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்காக*

வெற்றிடமாகியுள்ள தவிசாளர் பதவிக்குரிய நியமனத்தை மேற்கொள்ள முடியும். எனவே கிண்ணியா பிரதேச சபைக்கு, திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்களுக்கு மேற்கூறிய வரைபு வரவு செலவுத்திட்டத்தின் படியான பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளை 2023.01.28 ஆந் திகதி முதல் வெற்றிடமாகிய கிண்ணியா பிரதேச சபையின் தவிசாளர் பதவிக்கான நியமனம் மேற்கொள்ளப்படுகின்ற காலப்பகுதி வரை செயற்படுத்த நான் அங்கீகாரத்தினை வழங்குகின்றேன்.

முன்மொழிவுகள்:

1. சம்பளங்களும், கொடுப்பனவுகளும்
2. பயணப்படிகள்
3. காகிதாதிகள்
4. நடைமுறைச் செலவுகள்
5. LDSP, CDLG செயற்றிட்டம் தொடர்பான செலவுகள்
6. மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை/பிரமாண அடிப்படையிலான கொடை

**கிழக்கு மாகாண மாகாண சபை**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 223 ஆம் பிரிவின் கீழான கட்டளை

கிழக்கு மாகாணத்தின் ஆளுநரகிய அனுராதா யகம்பத் ஆகிய நான் 1989 ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 223 ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் மூலம் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளையை இத்தால் அறிவிக்கின்றேன்.

**அனுராதா யகம்பத்,**
ஆளுநர்,
கிழக்கு மாகாணம்.

ஆளுநர் செயலகம்,
உவர் மலை,
திருகோணமலை.
2023, சனவரி 30.

**கட்டளை**

கிழக்கு மாகாணத்திற்குட்பட்ட திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிண்ணியா பிரதேச சபை தவிசாளரினால் 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட ஆவணங்கள் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் 168 மற்றும் 169 ஆம் பிரிவுகளின்படி சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படாமல் இருக்கின்றமையினாலும், 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுக்ள) சட்டத்தின் 17 ஆம் பிரிவின்படி செயற்படாமை காரணமாகவும், 2023.01.28 ஆம் திகதி முதல் மேற்படி சபையின் தவிசாளர் பதவியிலிருந்து விலகியதாகவும் அத்தினம் முதல் அமுலுக்கு வரும் வகையில் குறித்த சபையின் தவிசாளர் பதவி வெற்றிடமாக இருப்பதாகவும் கருதப்படும்.

EOG 02 - 0023

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.